# முருகனும் வள்ளியும்

## (Murugana and Valli by *Kamil V. Zvelebil*)


**மூலக் கட்டுரை ஆங்கிலத்தில் : கமில் . வீ .ஸ்வெலிபில்**

**தமிழ் மொழி பெயர்ப்பு : சாந்திப்பிரியா ( nrj_1945@yahoo.com )**


வேடர்களின் மகளான வள்ளியுடன் முருகன் கொண்டிருந்த காதலும் அந்தக் கடவுளின் இரண்டாவது திருமணமும் தமிழ் கதைகளில் பிரபலமானது. சமஸ்கிருத நூல்களிலோ ஸ்கந்தனைப் பற்றிக் கூறுகையில் அவரை ஒரு பிரும்மசாரி அல்லது தேவக் கடவுளான தேவசேனா என்பவருடைய கணவர் ஆவார் எனக் கூறப்பட்டு உள்ளது. இதற்கு மாறாகத் தமிழ் நூல்களிலோ வள்ளியே முருகனின் மனைவி என்று கூறப்பட்டு உள்ளது. இது பல காலமாக திராவிடர்களினால் நம்பப்பட்டு வரும் கதை ஆகும். தமிழ் குடி முருகன் பக்தர்கள் இதுதான் உண்மையானது ஒன்று நம்புகின்றனர் என்பதிற்க்குக் காரணம் 1350 ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் இயற்றியதாகக் கூறப்படும் குச்சியப்பா எழுதி உள்ள கந்த புராணத்தின் 267 செய்யுள்களில் காணப்படும் கடைசி அத்தியாயமான வள்ளியம்மை திருமணப்படலம் என்பதே. அது என்ன ?

தொண்டை நாட்டின் மேற்பட்டியின் அருகில் உள்ளது வள்ளி வீர்ப்பு என்ற வள்ளி மலை. அந்த மலை அடிவாரத்தில் இருந்தான் நம்பி என்ற வேடன். அவனுக்கு இருந்த இருந்த அனைத்தும் ஆண் குழந்தைகளே. அதனால் தனக்கு ஒரு பெண் குழந்தை வேண்டும் என ஆசைப்பட்டான். ஆந்த மலையின் அடிவாரத்தில் சிலமுகி என்ற துறவி இருந்தார். ஒரு நாள் அவர் எதிரில் மிக அழகான அரபு தேசத்து மான் ஒன்று ஓடியது. அதன் உடல் அழகைக் கண்டு காம இச்சைக் கொண்ட அவர் அதை காமத்துடன் பார்க்க அந்த மான் கர்பமுற்றது. காலப் போக்கில் அது ஒரு குழந்தையைப் பெற்று வேடவப் பெண்கள் காட்டுக் கிழங்குகளைச் தோண்டி எடுத்து இருந்த ஒரு குழியில் பெண் குழந்தை ஒன்றைப் பெற்று எடுத்தப் பின்அதை அங்கேயே விட்டுவிட்டது. கிழங்குகளைச் எடுக்க வந்த வேடவர் பெண்கள் அந்தக் குழந்தையை கண்டதும் மிகவும் மகிழ்சியுற்று அந்தக் குழந்தையை தாங்களே எடுத்துக் கொண்டு போய் வேடர்களின் தலைவனான நம்பி தம்பதியரிடம் கொடுக்க அவர்களும் அவளை வளர்க்கலாயினர். அதற்கு வள்ளி எனப் பெயர் சூட்டினர்.

வள்ளிக்குப் பன்னிரண்டு வயதான பொழுது வேடர் குல வழக்கப்படி அவளை நெற் கதிர்கள் பயிரிடப்பட்டிருந்த வயலில் சென்று உயரத்தில் இருந்தப் பரணில் அமர்ந்து கொண்டு நெல் கதிர்களை சாப்பிட வரும் பறவைகளையும் விலங்குகளையும் துரத்தும் பணியில் அமர்த்தினர். அங்கு அப்போது வந்த நாரதர் அவள் அழகைக் கண்டு வியந்து தணிகை மலைக்குச் சென்று முருகனிடம் சென்று அவனுடைய அழகை விவரித்த பின் வேடவ இனத்தின் கடவுளின் மீது வள்ளிக்கு இருந்த பக்தியைக் குறித்துக் கூறினார். அதனால்

முருகன் தன் உருவத்தை ஒரு வேடன் போல் மாற்றிக் கொண்டு அங்கு சென்று அவளுடன் நட்புறவுடன் பழகி அவளைப் பற்றியும் அவளுடைய குடும்பத்தைப் பற்றியும் விஜாரித்து அறிந்து கொண்டார்.

அப்போது அவளுக்கு நம்பி என்ற வேடவன் மாவுத் தூள், தேன், வள்ளிக் கிழங்கு, மாம்பழம் மற்றும் காட்டுப் பசுவின் பால் முதலியவற்றை சாப்பிடக் கொண்டு வந்தான். அவனைக் கண்ட முருகன் உடனே தன்னை ஒரு மரம் போல உரு மாற்றிக் கொண்டார். நம்பியும் மற்றவர்களும் சென்ற பின் தன்னை மீண்டும் பழைய உருவத்திற்கு மாற்றிக் கொண்டு வள்ளியிடம் சென்று தான் அவளை காதலிப்பதாகக் கூற அதைக் கேட்ட வள்ளி அதிர்ந்து போனாள். தலையைக் குனிந்தபடி " கீழ் ஜாதியைச் சேர்ந்த ஒரு வேடவப் பெண்ணை அவர் விரும்புவது முறை அல்ல " என்றாள். அப்பொழுது பாடல்களைப் பாடியபடி நாட்டியமாடிக் கொண்டு வந்து கொண்டிருந்த ஒரு கும்பலைக் கண்டு பயந்து போன அவள் " வந்து கொண்டு இருப்பவர்கள் மிகுந்த கோபக்காரர்கள் " என்று கூற உடனே அவர் தன்னை ஒரு வயதான சிவனடியார் போல உரு மாற்றிக் கொள்ள, வந்தவர்களும் அவரை சிவனடியார் என நினைத்து அவரிடம் ஆசிகளைப் பெற்றுக் கொண்டு சென்று விட்டனர். அவர்கள் சென்றதும் அவர் வள்ளியிடம் தனக்கும் தேனும் தினையும் கலந்த உணவு தருமாறு கேட்க, அவளும் தனக்கு வந்த உணவைத் அவருக்குத் தந்தாள். அதை அவர் உண்டதும் அவரை பக்கத்தில் இருந்த ஒரு குளத்தின் அருகில் அழைத்துச் சென்று தன் இரு கைகளாலும் நீரை அள்ளி எடுத்துத் தந்து குடிக்க வைத்தாள். அதை பருகிய பின் அவர் தன் வயிற்றுப் பசியைத் தீர்த்து விட்டல் மட்டும் போதாது என்றும் தன் காதல் பசியையும் தீர்க்க வேண்டும் என அவளிடம் கூறியதும் அவள் தான் மீண்டும் வயலுக்குச் செல்ல நேரமாகி விட்டது என்றாள்.



அதனால் முருகன் தன் சகோதரனான வினாயகரை ஒரு யானைப் போல அவள் பின்னால் வந்து நிற்கும்படிக் கூறினார். திடீர் என வந்து தன் பின்னால் நின்ற அந்த யானையைக் கண்டு பயந்து போன அவள் அலறியபடி ஓடிச் சென்று முருகனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அணைத்துக் கொள்ள, அவரும் அவளை தன் உடலோடு அணைத்துக் கொண்டு ஆறு தலைகள், பன்னிரண்டு கரங்கள் கொண்டு மயில் மீது அமர்ந்து கொண்டவாறு தன்னுடைய நிஜ உருவத்தை காட்டினார். தன்னுடைய விருப்பக் கடவுள் தன் முன் தோன்ற அவரை வணங்கிய வள்ளியும் தான் உண்மையில் திருமாலின் மகளே என்றுக் கூறினாள்.

வள்ளியுடன் வயலுக்கு வந்திருந்த அவளுடையத் தோழி, எங்கேயோ போய் விட்டு இத்தனைத் தாமதமாகத் வள்ளி திரும்பியதின் காரணம் பற்றிக் கேட்க, நம்ப முடியாத எதோ ஒரு சாக்கைக் கூறினாள் வள்ளி. சற்று நேரத்தில் அங்கு மீண்டும் வேடவன் வேடத்தில் முருகன் வந்து நிற்க, வள்ளி மற்றும் முருகனின் கண்களும் ஒன்றிணைந்து சங்கமித்ததைக் கண்டாள் அந்தப் பெண். ஆகவே அந்த வேடனை அங்கிருந்தப் போய் விடுமாறு அவள் கூற தன்னுடையக் காதலைப் பற்றி அவர் அவளிடம் கூறிய பின் தங்களுக்கு அதற்கு உதவியாக இருக்க அவள் துணையையும் நாடினார். தேவையாயின் அவர்கள் கிராமத்திற்கு தான் பொய்கால் குதிரை ஆடியபடி வருவதாகவும் கூறினார். வள்ளியின் தோழியும் அதற்கு இணங்கினாள். அறுவடைக் காலம் முடிந்தது. வள்ளியும் தன் காதலனைப் இனி பார்க்க முடியாது என்பதினால் நம்பியின் வீட்டிற்கு மன பாரத்துடன் திரும்பச் சென்று விட வேண்டியதாயிற்று. அவள் திருட்டுத்தனமாக நடத்திக் கொண்டு இருந்த காதல் ஒரு முடிவுக்கு வந்தது. அவளுடைய தாயார் தன்னுடைய மகளின் முகவாட்டத்தைக் கண்டு பிடித்து விட்டாள். மலைப் பிரதேசத்தில் எதாவது தீய ஆவி அவளைப் பிடித்து விட்டதா என அறிந்து கொள்ள முருகனுக்கு பூஜை செய்யவும் பரிகாரம் செய்யவும் ஜோதிடர்களை அணுகினாள். முருகனோ மீண்டும் வயலுக்குச் சென்று வள்ளியைத் தேடினார். அவளை அங்கு காணாததினால் அவள் தோழியின் உதவியை நாடிப் பெற்று வள்ளியைத் திருட்டுத்தனமாக சந்தித்தப் பின் அவளை அழைத்துக் கொண்டு சென்று விட்டார்.



மறுநாள் வள்ளியைக் காணாததினால் கோபமுற்ற நம்பி கைத் தேர்ந்த வேடர்களை அனுப்பி ஓடிப்போன அவர்களைத் தேடுமாறு கட்டளை இட்டான். அவர்களும் ஓடிக் கொண்டு இருந்த முருகனைக் கண்டு அவர் மீது அம்புகளை வீச, அவருடைய சேவல் எழுப்பிய சப்தத்தில் துரத்தி வந்தவர்கள் அனைவரும் மடிந்து விழுந்தனர். அவர்கள் மடிந்து போனதைக் கண்டு அழுது புலம்பிய வள்ளியை தேற்றி அழைத்துக் கொண்டு சென்றார் முருகன். வழியில் நாரதரைக் காண்ட அவர்களிடம் " அவளுடைய பெற்றோர்களின் அனுமதியைப் பெற்று அவளை அழைத்துக் கொண்டு போய் இருக்க வேண்டும் " என அவர் அறிவுரைக் கூற, இறந்து போன வேடர்களை மீண்டும் உயிர் பிழைக்க வைத்த பின் தன் உண்மையான உருவத்தை அவர்களுக்குக் காட்டினார். அவர்கள் அவரை வணங்கித் துதித்து தங்களுடன் கிராமத்திற்கு வந்து தங்ளுடைய இன வழக்கத்தின்படி வள்ளியை திருமணம் செய்து கொள்ளுமாறு அவரிடம் வேண்ட, அங்கு சென்ற அவர்கள் உற்சாக வரவேற்பு பெற்றனர். அவர்களுக்கு ஒரு புலித் தோலை பரிசாகத் தந்தனர். நாரதர் முன்னிலையில் வள்ளியின் கரங்களை முருகனின் கைகளில் நம்பி வைக்க அவர்கள் திருமணம் செய்து கொண்டு விட்டதாக கருதப்பட்டது. திருத்தணியில் சில நாட்கள்

வாழ்ந்த பின் ஸ்கந்தகிரிக்கு திரும்பிய வள்ளியையும் முருகனையும் தேவசேனா அன்புடன் வரவேற்றார்.

இந்த உணர்சியைத் துாண்டும் கதையின் ஒவ்ஒரு வரிகளும் பண்டைய காலத்திய தமிழர்களின் பணபாட்டை குறிக்கும் வகையிலேயே அமைந்து உள்ளது தெரியும். இருவரும் இணைந்த அற்புதமான காவியம் - கதாநாயகி மலைவாழ் மக்களிடம் பிறக்கிறாள், பன்னிரண்டு வயதில் பரண் மீது அமர்ந்து வயலகளைப் பாதுகாக்கும் பணியில் அமர்கிறாள், அங்கு கடவுளின் அதாவது காதலனின் சந்திப்பும் கள்ளத்தனமான உறவும், அதற்கு அவளுடையத் தோழியின் உதவி, பொய்க்கால் குதிரை ஆட்டம், காதலன் பிரிவினால் வள்ளி அடைந்த சோகம், ஜோதிடர்களை அழைத்து ஆலோசித்தது, வேலனின் உக்கிரத் தாண்டவம், முருகனையே வேண்டிக் கொண்டு ஆவியை விரட்ட செய்த ஏற்பாடுகள, காதலர்கள் ஓடிவிட்ட சம்பவங்கள் என அனைத்தும் தமிழர்களின் பாணியிலேயே அமைந்து உள்ளன.

தெய்வ நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்து உள்ள அபூர்வமான இந்தக் கதை ஒரு தெய்வத்தின் மீதான நம்பிக்கையை வலுப்படுத்தவும் அந்தக் கதையின் கருவை நியாயப்படுத்தும் விதத்திலும் அனைத்துக் காட்சிகளையும் நன்கு அமைத்து உள்ளனர் என்பதை நானும் முழுமையாக நம்புகிறேன். ஆனாலும் தெய்வத்தின் அற்புதச் செயல்களைக் கூட சமுகத்தின் மன மாற்றங்களுக்கும் நம்பிக்கைகளுக்கும் ஏற்ப வரலாற்று சிறப்பு மிக்க அற்புதமான கதையாக எழுதப்பட்டு உள்ளது. வரவாற்று புகழ் பெற்ற அந்த தெய்வத்தின் கதையை படிப்படியாக ஆராய்ந்தும் சரியான முறையில் விளக்கிக் கூறுவதும் அவசியம்.

## வள்ளி

வள்ளி என்றப் பெயர் திராவிடர்களின் வரலாற்றில் இருந்து வந்தது என்பது தெளிவு. பழங்காலப் பழக்கத்தின்படி வள்ளி என்றப் பெயர் வள்ளி என்ற செடியின் பெயரில் இருந்தே வந்தது. இது மலைவாழ் மக்களின் மொழியான தா.மா.கா.கோட; (**Ta. Ma. Ka. Kod. Tu. and Te.**) மற்றும் தீ என்பதில் இருந்தே வந்தது. அந்த செடி மேல்புறம் கிளைகள் பறந்து கொண்டிருக்க, கீழே நிலத்தடியில் பெருத்தபடி வளரும் இந்தச் செடி பாழடைந்த பூமிகளில் வளரும் ஒன்று. இது பற்றிய செய்தி கி.பி 140-200 ல் கபிலர் வாழ்ந்த குறுஞ்சியில் உள்ள குறிஞ்சிப்பட்டு என்ற பகுதியில் வளரும் 99 விதமான செடி கொடிகளின் பெயர்களில் உள்ளது. பண்டைய தமிழ் நூல் வரலாறுகளில் அந்தக் கிழங்குச் செடியின் பெயரில் அமைந்து இருந்த வள்ளி என்ற பெயர் 18 இடங்களில் கூறப்பட்டு உள்ளது. இது நிச்சியமாக திராவிட இயக்க நூல்களில் இருந்தே வந்த இருக்க வேண்டும், ஏன் எனில் ஆர்ய வரலாற்றைக் குறிப்பிடும் சமஸ்கிருத மொழி நூல்களில் வெகு காலத்திற்குப் பின்னர்தான் அந்தப் பெயர் குறிப்பிடப்பட்டு உள்ளது. புராணக் கதையின்படி வள்ளிக் கிழங்கைத் தோண்டி எடுத்துக் கொண்டு இருந்த பொழுது கிடைத்ததினால் அதற்கு வள்ளி எனப் பெயர் வைத்தனர். வள்ளிச் செடி பற்றிய செய்தி அகம் 52.1, மற்றும். 286.2, புரம். 316.9, நார். 269.7 மற்றும் பாரிப். 21.10 யிலும், வள்ளி கிழங்கு பற்றி புக். 109.6 மற்றும் கல. 39.12 லும் என்குர். 250 ல் ( **Akam** 52.1 , 286.2, **Puram** 316.9, **Nar**. 269.7 **and Parip**. 21.10. **Puc**. 109.6 **Kal**. 39.12. **In Ainkur**. 250 )

முக்கியமற்ற செய்தியாகக் கூறப்பட்டு இருந்தாலும் வள்ளிச் செடி பற்றியும் முருகன் வழி பாட்டையும் பற்றியும் கூறப்பட்டு உள்ளன. ஆறாம் நூற்டாண்டுக்கும், பக்தி நெறி தோன்றுவதற்கும் முந்தையக் காலங்களில் எழுதப்பட்ட சுமார் ஏழு நூல்களில்தான் வள்ளி முருகனின் காதலி என்றும் மனைவி எனவும் கூறப்பட்டு உள்ளது தெரிகின்றது. அவர்களைப் பற்றியக் குறிப்பு நார. 82.4, தீரு முருக.102, பாரப் 8.69, 9.8, 9.67 மற்றும் 14.22 விலும் சிலப் 24.3 லும் உள்ளன. (**Nar**. 82.4, **Tirumuruk**. 102, **Parip**. 8.69, 9.8, 9.67, 14.22 **and Cilap**. 24.3.) இரண்டு அல்லது மூன்றாம் நூற்டாண்டைச் சோர்ந்த நாரிணை 82.4 என்ற மிகப் பழைமையான தமிழ் நூலில், குறிஞ்சி என்ற தலைப்பில் அகம் என்ற பாடலில் உள்ளது இது. – நீயே என்னுள் வருதியோ நல்நாடக்கோடிச்சி முருகுபுணர்ந்து இயன்ற வள்ளி போல (niye/ennul varutiyo nalnataik koticci murukupunarntu iyanra valli pola) " – அதாவது ஏ பெண்ணே, அழகு சொட்டும் மலைப் பெண்ணான நீ , முருகனிடம் மகிழ்சியோடு சென்ற வள்ளிப் போல என்னிடம் வருவாயா ? பாலுணர்வைத் தூண்டும் வகையில் கதாநாயகன் அந்தப் பெண்ணைத் தன்னுடன் புணரும்படி - முருகுபுணர்ந்து வள்ளி- அதாவது ஆண் பெண் உறவுக்கு அழைப்பது போல அழைக்கின்றான். ஆகவே 2 அல்லது 3 ஆம் நூற்றாண்டில் வள்ளி- முருகன் இடையில் ஏற்பட்ட காதலின் பின் இருந்தவர்கள் பால உறவினைப் பற்றி நன்கு அறிந்து கொண்டு இருந்தனர். அதை மனிதர்களுக்கு ஒரு படிப்பினையாகச் சொல்லவும், கவிஞர்களின் கற்பனை நயத்திற்கு பொருள் தரவும் உபயோகித்தனர். 2 அல்லது 3 ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் இந்தக் கதைப் பற்றித் தெரிந்து இருந்தாலும் சமஸ்கிருத காவியங்களிலும் வட இந்தியாவில் இருந்த எந்த நூலிலும் வள்ளி பற்றி குறிப்பிடப்படவில்லை என்பது கவனிக்கப்படவேண்டியதே.

## திருமுறுகாற்றுப் படை

பல காலத்திற்குப் பின் எழுதப்பட்ட திருமுறுகாற்றுப் படை என்ற நூல் மற்றவைகளை விட மிகவும் மாறுபட்ட நூலாகும். இது கவிநயம் மட்டும் மிக்க நூலாக இல்லாமல் தமிழ் இலக்கியத்தில் முதன் முறையாக முருகன் என்ற கடவுளைத் துதிக்கும் நூலாகவே இருந்தது. திருமுறுகாற்றுப்படையில் வள்ளியை கபடமற்ற மலை வாழ் மங்கை எனவும் அவளுக்கு கொடி போன்ற இடை இருந்ததாகவும் அவுள சாந்தமாகப் பார்த்தவண்ணம் முருகன் இருப்பதாகவும் எழதப்பட்டு உள்ளது. திருமுறுகாற்றுப்படையில் முதன் முறையாக சமிஸ்கிருத நூல்களில் கூறப்பட்டுள்ள ஸகந்த முருகனைப்பற்றி மறைமுகமாக எழுதப்பட்டு உள்ளது. அதில் பிராமணக் குல வழக்கப்படி நடத்தப்படும் திருமணங்களைப் பற்றி கூறிய பின் தேவசேனாவின் கற்பைக் குறித்தும் கூறி உள்ளது. தேவசேனா செய்து கொண்ட மணம் வைதீக ஆசாரத்தின்படி அமைந்து இருக்க வள்ளியின் திருமணமோ ஆரியர்கள் காலத்துக்கு முற்பட்ட காதல் திருமணத்தில் நடந்த ஆசார-வைதீகமற்ற முறையில் நடந்த திருமணம் என்கின்றது. உண்மையில் வள்ளி-முருகன் என்பவர்கள் கல்யாணத்துக்கு முன் தோன்றிய காதலினால் இணைந்தவர்கள் என்றும் மிகப் புராணமான காலத்தில் எழுதப்பட்டுள்ள உண்மையற்ற கதையின் நாயகர்கள் என்றும் நினைக்க வேண்டி உள்ளது.